**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.** 31 **நாள்:** 07.04.2024

மக்களவை பொதுத் தேர்தல் 2024னை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வடசென்னை, தென் சென்னை மற்றும் மத்திய சென்னை பாராளுமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய சென்னை மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் மற்றும் 85 வயதிற்கு மேற்பட்டோர் வாக்குப்பதிவு மையத்திற்கு நேரடியாகச் சென்று வாக்களிக்க இயலாத காரணத்தினால், மேற்கூறிய நபர்களுக்கு மட்டும் வாக்குப்பதிவு உரிமையை வழங்கும் வகையில் விருப்பமுள்ள வாக்காளர்களுக்கு அஞ்சல் வாக்குச் சீட்டு மூலம் வாக்களிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி விருப்பமுள்ள வாக்காளர்களிடமிருந்து அஞ்சல் வாக்குச்சீட்டு கோரிய படிவம்-12D பெறப்பட்டு, வாக்காளர்களின் பாகம் எண், வரிசை எண் ஆகியன சரிபார்த்து அஞ்சல் வாக்குச் சீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது.

அஞ்சல் வாக்குச் சீட்டு மூலம் வாக்களிக்க விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்துள்ள, வாக்காளர்களுக்கு அஞ்சல் வாக்குச் சீட்டினை வழங்கி, வாக்குப்பதிவு செய்யும் முறை மற்றும் அதனை உரிய உறையிடுதல் குறித்து தெளிவாக எடுத்துக் கூறி, பதிவு செய்யப்பட்ட வாக்குச்சீட்டு அடங்கிய உறை, உறுதிமொழி படிவம் அடங்கிய உறையை பெற்றுவரும் பணிக்கென கீழ்க்கண்டவாறு வாக்குப்பதிவு குழுக்களை நியமித்து உத்தரவிடப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ. எண் | சட்டப்பேரவை தொகுதி | பெறப்பட்ட 12D படிவம் | | மொத்தம் எண்ணிக்கை | அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் |
|---|---|---|---|---|---|
| | | 85 வயதிற்கு மேற்பட்டோர் | மாற்றுத் திறனாளிகள் | | |
| 1. | திருவொற்றியூர் | 49 | 7 | 56 | 1 |
| 2. | டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் | 72 | 32 | 104 | 2 |
| 3. | பெரம்பூர் | 173 | 39 | 212 | 3 |
| 4. | கொளத்தூர் | 255 | 19 | 274 | 4 |
| 5. | திரு.வி.க.நகர் | 55 | 12 | 67 | 1 |
| 6. | இராயபுரம் | 39 | 13 | 52 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | விருகம்பாக்கம் | 324 | 45 | 396 | 5 |
| 8. | சைதாப்பேட்டை | 227 | 14 | 241 | 4 |
| 9. | தியாகராயநகர் | 521 | 39 | 560 | 8 |
| 10. | மயிலாப்பூர் | 348 | 16 | 364 | 5 |
| 11. | வேளச்சேரி | 417 | 12 | 429 | 6 |
| 12. | சோழிங்கநல்லூர் | 296 | 6 | 302 | 5 |
| 13. | வில்லிவாக்கம் | 229 | 32 | 261 | 4 |
| 14. | எழும்பூர் | 143 | 14 | 157 | 2 |
| 15. | துறைமுகம் | 49 | 6 | 55 | 1 |
| 16. | சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி | 123 | 6 | 129 | 2 |
| 17. | ஆயிரம்விளக்கு | 353 | 17 | 370 | 5 |
| 18. | அண்ணாநகர் | 502 | 34 | 536 | 8 |
| **மொத்தம்** | | **4175** | **363** | **4538** | **67** |

மேற்காணும் வாக்குபதிவு குழுக்கள் வருகின்ற 08/04/2024 முதல் 13/04/2024 வரை அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்குச் சென்று வாக்குப்பதிவு முடிந்தவுடன் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வாக்குச் சீட்டை (உறையிட்ட) ஒப்படைக்க உள்ளன என மாவட்ட தேர்தல் அலுவலர்/ கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**